அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 313

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
22 நவம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

**01-ஆகஸ்ட் 1984 ஆம் திகதி தொடக்கம் 31-டிசம்பர் 1984 ஆம் திகதி வரை உள்ள காலப்பகுதியில் ஏற்பட்ட குழப்பங்களினால் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டதுடன்/ அல்லது அசையும் சொத்துக்களை இழந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள முற்பணம்**

---

1-ஆகஸ்ட் 1984 ஆம் திகதி தொடக்கம் 31-டிசம்பர் 1984 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் (இரு தினங்களும் உட்பட) அனுராதபுரம், புத்தளம், கம்பஹா, குருநாகல், கேகாலை, மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, காலி, இரத்தினபுரி, திருகோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட குழப்பங்களால் உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டதுடன்/அல்லது அசையும் சொத்துக்களை இழந்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு (கணவன் மனைவி இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாய் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக)

(i) சம்பள முற்பணம் வழங்கும் தினத்தில் குறைந்தது (10) பத்து வருட சேவையைக் கொண்டுள்ள சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆகக் கூடியது இரண்டு வருட (படிகள் இன்றி) புதிய திரட்டிய சம்பள முற்பணம் வரை அல்லது

(ii) பத்து (10) வருடங்களுக்குக் குறைந்த சேவைக் காலத்தை யுடைய சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆகக் கூடியது ஒரு வருட புதிய திரட்டிய சம்பள (படிகள் இன்றி) முற்பணம் வரை.

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம்.

(அ) வழங்கப்படும் கடன் தொகையானது திணைக்களத் தலைவர் திருப்திப்படும் வகையில் நிரூபிக்கப்பட்ட சேதத்தின் அளவினை ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலமானது எட்டு (8) வருடங்களுக்கு அதிகப்படுதலாகாது.

(இ) வட்டியானது வருடமொன்றுக்கு நூற்றுக்கு 7.2 (ஏழு தசம் இரண்டு) ஆக இருத்தல் வேண்டும்.

(ஈ) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் இருவர் தனிப்பட்ட உத்தரவாதியாக இருத்தல் வேண்டும். (பிரேரிக்கப்பட்ட உத்தரவாதிகள் இருக்கும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க பொருத்தமானவர்களாயும் தகுதியுடையவர்களாயும் உள்ளனர் என கடனை வழங்க அனுமதிக்கும் அதிகாரி தம்மளவில் திருப்தியடைதல் வேண்டும்.)

(உ) முற்பணத்தைப் பெறுபவர் 55 வயதை அடையும் பொழுது கடன் தொகையையும் வட்டியையும் பூரணமாக அறவிடக் கூடிய வகையில் முற்பணம் உம்/அல்லது தவணைப் பணத் தொகையை தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) ஓய்வு பெறுதற்கு முன்னர் கடன் தொகையை செலுத்தி முடித்துவிடுவதாக அல்லது ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் தனது ஓய்வூதியத்தை மாற்றி மீளச் செலுத்துதற்குக் கடன் தொகையில் மிச்சம் ஏதேனும் இருப்பின் அந்த மிகுதித் தொகையைத் தனது மாற்றிய ஓய்வூதியத்தில் அல்லது ஓய்வூதியத்தில் இருந்து அறவிடுதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கோ திணைக்களத் தலைவருக்கோ அதிகாரம் வழங்குவதாக மாற்ற முடியாத ஒரு ஒப்பந்தத்தின் பேரில் 55 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கும் சம்பள முற்பணம் வழங்கலாம். தாபனக் கோவையின் 14-ஆம் பின்னிணைப்பில் காணப்படும் மாதிரிப் படிவத்தை மேற்கூறிய மாற்ற முடியாத ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்குப் பயன்படுத்தலாம்.

சம்பள முற்பணத்தை மீளச் செலுத்துவதாவது 8 வருடங்களுக்கு மேற்படாத கால வரையறையுள் நிகழும் என்ற அடிப்படையில் மீளச் செலுத்தும் தவணைத் தொகையைக் கணக்கிடுவதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது.

அத்துடன் 1(எ) 55 வயதை அடையுமுன் கடன் வாங்கியவர் மரணமடைந்தால்/ ஏதேனும் ஒரு சூழ்நிலையில் ஓய்வு பெற்றால் அது நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் கடன் தொகையிலும் வட்டியிலும் மீளச் செலுத்தப்படாதிருக்கும் எஞ்சிய தொகையானது பிரஸ்தாப உத்தியோகத்தரின் மாற்றிய ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடையிலிருந்து முதலில் அறவிடப்படும் தொகையாகக் கருதப்பட வேண்டும்.

2. (அ) இந்த முற்பணமாவது அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அவரது தாரத்துக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள கடன் ஏதேனும் உண்டானால் அதற்கு புறம்பானதும் அதற்கு மேலதிகமானதுமானதுமாகும்.

(ஆ) முற்பணம் பெறுபவரும் உத்தரவாதியும் நி.பி.238-உடன் தாபனக் கோவையின் XXV-ஆம் அத்தியாயத்திலும் காட்டப்பட்டுள்ள 40%வீதமும் 33 1/3% வீதமுமான கழிவு வரையறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

(இ) 237-ஆம், 250-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் கீழ் ஏலவே சம்பள முற்பணம் பெற்றுள்ள ஒரு உத்தியோகத்தருக்கு மேற்குறித்த காலப்பகுதியில் உடைமைச் சேத ஏற்பட்டிருந்தால் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றுக் கொள்ளக் கூடிய முற்பணத்துக்கும் முன்னர் பெற்றுக் கொண்ட பணத்தில் மீளச் செலுத்தாதுள்ள மிகுதித் தொகைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை வழங்கலாம்.

3. இந்தச் சம்பள முற்பணத்துக்கான விண்ணப்பங்கள் விதித்த படிவத்தில் தரிக்கப்பட்டு ...31-01-1986......... ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் திணைக்களத் தலைவரைச் சென்றடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும். 19-01-1984 ஆம் தேதிய 237 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தலாம்.

4. ஒப்பந்தத்துக்கும் பிணை நிற்போர் முறிக்கும் முறையே 1ரூபாய் பெறுமான முத்திரையும் 10 ரூபாய் பெறுமதியான முத்திரையும் ஒட்டுதல் வேண்டும்.

5. 19-01-1984 ஆம் திகதியையும் 237 ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 4-ஆம் பந்தியிலிருந்து 12-ஆம் பந்திவரை உள்ள ஏற்பாடுகளும் இந்த முற்பண விடயத்தில் செல்லுபடியாகும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.